# 3

# சிவராத்திரி



சிவபெருமானை விசேடமாக வழிபடுவதற்குரிய விரதங்களில் சிவராத்திரியும் ஒன்றாகும். சிவனுக்கு உரிய இராத்திரி என்பதால் சிவராத்திரி எனப்படும். சிவராத்திரி ஐந்து வகைப்படும். அவை மஹா சிவராத்திரி, மாத சிவராத்திரி, யோகசிவராத்திரி, பட்ச சிவராத்திரி, நித்திய சிவராத்திரி என்பவையாகும். மாசி மாதத் தேய்பிறைச் சதுர்த்தசியில் நோற்கப்படுவதே மஹா சிவராத்திரியாகும்.

நாம் ஒவ்வொருநாளும் காணும் இராத்திரி சாதாரண இராத்திரியாகும். இராத்திரி என்றால் இருட் காலம் என்பதாகும். உண்மையான இருட்காலம் என்பது இறைவன் உலகம் முழுவதையும் ஒடுக்கி நிற்கும் காலம். இதனை சர்வசங்கார காலம், பிரளய காலம், ஊழி முடிவு என்றெல்லாம் கூறுவர். இந்தப் பேரிருட் காலத்தில் தனித்து நிற்பவர் சிவபெருமான் ஒருவரேயாவார்.

## சிவராத்திரி பற்றிய புராணக் கதை



ஒரு சமயம் படைப்புக் கடவுளான பிரமனும் காத்தற் கடவுளான விஷ்ணுவும் ஆணவத்தோடு தம்முள் யார் பெரியவர் என முரண்பட்டு வாதிட்டனர். அப்போது அவர்களின் முன்பு சிவபெருமான் பேரொளிப் பிழம்பாகக் காட்சியளித்தார். ''இந்த ஒளிப்பிழம்பின் அடியையாவது முடியையாவது கண்டுவருபவரே பெரியவர்'' என்று ஓர் அசரீரி ஒலித்தது.

பிரமா அன்னப்பட்சி வடிவிற் பறந்து சென்று ஒளிப்பிழம்பின் முடியைக் காண முயன்றார். விஷ்ணு பன்றி வடிவில் மண்ணைக் குடைந்து சென்று அதன் அடியைக் காண முயன்றார். இருவரும் தங்கள் முயற்சிகளில் தோல்வியுற்றனர். தமது இயலாமையையும் சிவபெருமானே பரம்பொருள் என்பதையும் உணர்ந்தனர். இக்கதை மூலம் ஆணவம் கொண்டவர்களால் இறைவனை அறிய முடியாது என்ற பேருண்மை வெளிப்படுகின்றது.

பிரம விஷ்ணுக்கள் சோதிப்பிழம்பின் முடியும் அடியும் தேடிய சம்பவம் நிகழ்ந்த தினமே மகா சிவராத்திரி விரத நாளாகும். இத்தினத்திற் பிரம விஷ்ணுக்களுக்குத் தமது பரத்துவத்தை உணர்த்துவதற்குச் சிவபிரான் இலிங்கத்தில் உற்பவித்து இலிங்கோற்பவ மூர்த்தியாக வெளிப்பட்ட அர்த்தசாமமே